Registered as a Newspaper

# உதயன்


விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 65

திங்கட்கிழமை 30 ஜனவரி 2023

தை 16 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



அடக்குமுறைக்கு எதிரான கரிநாள் சுவரொட்டி ஒட்டுவதை கண்காணிக் கும் இராணுவத்தினர்.

# 'எழுவோம் எழுவோம் தமிழர் தேசமாக!!!'

## யாழ். பல்கலையிலிருந்து கரிநாள் பேரணி மட்டக்களப்பு நோக்கி பெப். 4 ஆரம்பம்

**யாழ்ப்பாணம், ஜனவரி 30**

**'வடக்கிலிருந்து கிழக்கை நோக்கி தமிழர் தேசமே எழுந்துவா' என்ற கருப்பொருளில் இலங்கையின் சுதந்திர நாளான பெப்ரவரி 4ஆம் திகதி - கரிநாள் பேரணி இடம் பெறவுள்ளது. வடக்கு - கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகும் இந்தப் பேரணி மட்டக்களப்பில் 7ஆம் திகதி நிறைவுறும்.**

»11

## தமிழரசின் பங்காளிகள் 'குழப்படிக்காரர்களாம்'!

### குமுறுகிறார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், ஜன. 30

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியுடன் கடந்த 20ஆண்டுகளாக ஒன்றாகப் பயணித்த - கூட இருந்தவர்களை திருத்துவதற்கு எடுத்த முயற்சியில் தோற்றுவிட்டோம் என்று தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

»11

## தமிழ்க் கூட்டமைப்பில் அரசின் கைக்கூலிகள்

### சுமந்திரன் தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 30

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இன்று தம்மை அடையாளப்படுத்துபவர்கள் அரசின் கைக்கூலிகள் - அரசோடு ஒட்டி நின்று கூட்டமைப்பை பலவீனப்படுத்த முயன்றவர்கள் - இவ்வாறானதொரு குற்றச்சாட்டை முன்வைத்துள்

»11

## கரிநாள் போராட்டத்திலும் தமிழரசுக் கட்சி தனிவழி



யாழ்ப்பாணம், ஜன. 30

இலங்கையின் சுதந்திரநாளான பெப்ரவரி 4 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பேரணி ஆரம்பமாகவுள்ள நிலையில், அன்றைய தினம் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் கரிநாள் போராட்டம் மட்டக்களப்பில் நடத்தப்படவுள்ளதாக அந்தக் கட்சியின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

'இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினம் தமிழர்களுக்கு மட்டு

»11

## இலங்கையின் சுதந்திரநாள்: வடக்கில் வலுக்கும் எதிர்ப்பு

மன்னார், ஜன. 30

இலங்கையின் 75ஆவது சுதந்திர நாளை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாங்கள் கரிநாளாகக் கடைப்பிடிக்கவுள்ளோம் என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் ஒன்றியத் தலைவி உதயச்சந்திரா தெரிவித்தார்.

»11

### ஆணைக்குழு உறுப்பினர்கள்

## தேர்தல் வர்த்தமானியில் கையெழுத்திடவில்லை

கொழும்பு, ஜன. 30

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களின் கையொப்பத்துடன் உள்ளூராட்சித் தேர்தல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவதற்கு அரச அச்சகத்துக்கு அனுப்பப்படவில்லை. இதனை அரசாங்கத் தகவல் திணைக்களம் நேற்று உறுதிப்படுத்தியுள்ளது. (அ-ஒ-இ)

## 82 ஆயிரம் பேர் தேர்தல் களத்தில்

கொழும்பு, ஜன. 30

மார்ச் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் 340 உள்ளூராட்சிசபைகளில் 8 ஆயிரத்து 771 ஆசனங்களுக்கு 30க்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக்

»11

## சபைகள் கலைக்கப்படாமையால் தேர்தல் விதிமீறல்கள் தாராளம்!!

யாழ்ப்பாணம், ஜன. 30

உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்படாமல் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுள்ளமையால் அரச சொத்துக்களை வேட்பாளர்கள் துஷ்பிரயோகம் செய்யும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று அரசியல் ஆய்வாளர் அ.ஜோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் இந்தக் குற்றச்சாட்டை அவர் முன்வைத்துள்ளார்.

»11

## மாமுனைக்கடலில் குளிக்கச் சென்ற சிறுவன் மாயம்

### கடற்படை, மக்கள் இரவிரவாக தீவிர தேடுதல்

யாழ்ப்பாணம், ஜன. 30

வடமராட்சி கிழக்கு மாமுனைக் கடலில் அலையில் அடித்துச் செல்லப்பட்ட 15 வயதுச் சிறுவனைத் தேடும் பணிகள் நேற்று இரவிர

»11

## மோ.சைக்கிள் விபத்து; சாவகச்சேரியில் ஒருவர் பலி!



கொடிகாமம், ஜன. 30

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஏ - 9 வீதியில் சாவகச்சேரி சங்கத்தானையில் நேற்று மாலை இடம் பெற்ற இந்த விபத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த பொற்கொல்லர் வீதியில் வசிக்கும் நகைக் கடை உரிமையாளரான

»11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# '13' ஐ செயற்படுத்துவதற்கு ஜனாதிபதிக்கு உரித்தில்லை!

## மக்கள் ஆணையற்றவர் என்று பெரமுன எம்.பி. போர்க்கொடி



**கொழும்பு, ஜன. 30**

**மக்கள் ஆணையற்ற ஜனாதிபதியாக விளங்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைத்தும் உரிமை கிடையாது. இவ்வாறான நடவடிக்கையால் நாட்டில் மீண்டும் வீண்பிரச்சினைகளை தலைதூக்கச் செய்யவேண்டாம் - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமன எச்சரித்துள்ளார்.**

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்காக 13ஆவது அரசமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்மிரசிங்க அறிவித்துள்ளார்.

1987ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் திருத்தத்தில், அதன் பின்னர் இலங்கையில் ஆட்சியமைத்த நிறைவேற்றதிகாரமுடைய ஜனாதிபதிகள் எவரும் கைவைக்கவில்லை. இதில் பிரச்சினை காணப்படுவதாலேயே அவர்கள் அதனைச் செய்யவில்லை. இது ஜனநாயகத்துக்கு விரோதமானது.

மக்கள் உண்பதற்கு உணவின்றித் தவித்துக் கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நாட்டில் வீண்பிரச்சினைகளை ஏற்படுத்த முயற்சிக்கக்கூடாது:

அடுத்துவரும் தேர்தலை இலக்காகக் கொண்டே 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளாரே தவிர தமிழ் மக்கள் மீது கொண்ட இரக்கத்தால் அல்ல என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். இறுதியில் தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் ஏமாற்றும் வித்தையை ரணில் விக்கிரமசிங்க கையாள்கிறார். மக்கள் ஆணையற்ற பெயரளவிலான ஜனாதிபதிக்கு இவ்வாறான பாரதூரமான முடிவுகளை எடுக்கக்கூடிய உரிமையில்லை. அவரால் இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த முடியாது - என்றார். (ச-இ)



# '13' தொடர்பான பேச்சு புதிய நாடகமொன்றே!

## கிரியெல்ல காட்டம்

கொழும்பு, ஜன. 30

நாட்டை வங்குரோத்து நிலைமைக்கு உள்ளாக்கியவர்கள் தற்போது புதிய நாடகமொன்றை அரங்கேற்றுவதற்காகவே 13ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் பேசிக் கொண்டிருக்கின்றனர். இதனை அடிப்படையாகக் கொண்டு இனவாதத்தை தூண்டுவதற்கே முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

13ஆவது திருத்தம் இன்றும் அரசமைப்பில் காணப்படுகிறது. 13ஆவது திருத்தத்தின் கீழ் அனைத்துக் கட்சிகளும் தேர்தலில் போட்டியிடவுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன பெரமுன, மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் இதை ஏற்றுக் கொண்டுள்ளன. மாகாணசபைகளை அனைத்துத் தரப்பும் ஏற்றுக் கொண்டுள்ளன. இதனை ஏற்றுக்கொண்டமையின் காரணமாகவல்லவா தேர்தலில் போட்டியிட்டனர்? தற்போது தேர்தலுக்காக புதிய நாடகம் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது.

நாட்டை வங்குரோத்தடையச் செய்துள்ளமையால், இனவாதத்தைத் தூண்டுவதே இலகுவான விடயமாகும். எனவேதான் அதனைச் செய்வதற்கு தயாராகிக் கொண்டிருக்கின்றனர்.

நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளமை எந்தவகையிலும் தேர்தலில் தாக்கம் செலுத்தாது. தேர்தலை நடத்துவதற்கான உரிமை தேர்தல்கள் ஆணைக்குழுவிடமே காணப்படுகிறது. தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனமானதாகும். இதற்கு எவராலும் அழுத்தம் வழங்க முடியாது. அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமையான வாக்குரிமையை எந்தவொரு நிறுவனத்தாலும் பறிக்கமுடியாது - என்றார். (ம)

# தேர்தல் நடைபெறுமா? இறைவனுக்கே வெளிச்சம்

## தயாசிறி கைவிரிப்பு

கொழும்பு, ஜன. 30

தேர்தல் இடம்பெறுமா, இல்லையா என்பது தற்போதும் நிச்சயமற்ற நிலைமையிலேயே உள்ளது. அதனை இறைவன் மாத்திரமே அறிவார். வேட்பாளர்கள் தமது பணத்தைச் செலவிட முன்னர் உண்மையில் தேர்தல் இடம்பெறுமா, இல்லையா என்பதை அரசாங்கம் அறிவிக்கவேண்டும் என்று சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் இடம்பெற்றது. மத்தியகுழுக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே தயாசிறி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கை சின்னத்தில் போட்டியிடும் தொகுதிகளிலும், கூட்டணியாகப் போட்டியிடும் தொகுதிகளிலும் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பது தொடர்பில் மத்திய குழு கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டது. அதற்கமைய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் விரைவில் மாவட்ட மட்டத்தில் எமது கூட்டங்கள் ஆரம்பமாகும். அதற்கமைய கம்பஹாவில் எமது முதலாவது கூட்டத்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த அரசாங்கம் தேர்தலை நடத்துமா, இல்லையா என்பதை அந்தக் கடவுள் மாத்திரமே அறிவார். காரணம் அரசாங்கம் ஆரம்பம் முதலே தேர்தலை நடத்துவதற்கான நிதி இல்லை என்று கூறிக் கொண்டிருக்கிறது. இதற்கு மத்தியில் தற்போது ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் பதவி விலகியுள்ளார். இவ்வாறு வெவ்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலேயே நாம் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றோம். எனவே உண்மையில் தேர்தல் இடம்பெறுமா, இல்லையா என்பதை அரசாங்கம் விரைவில் அறிவிக்கவேண்டும். காரணம் வேட்பாளர் தமது பணத்தைச் செலவிட முன்னர் அவர்களுக்கு தீர்க்கமான முடிவொன்று வழங்கப்பட வேண்டும் - என்றார். (ம)

..........

## காஞ்சனவின் குற்றப்பத்திரிகை; எந்நேரமும் எதிர்கொள்ளத் தயார்!

கொழும்பு, ஜன. 30

அமைச்சர் காஞ்சனவால் தயாரிக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றப்பத்திரிகையை எதிர்கொள்ள ஆவலுடன் காத்திருப்பதாக பொதுப்பயன்பாடு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனக ரத்நாயக்கவை குறித்த ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து விலகுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் காஞ்சன நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் தெரிவித்தார். இதற்கு ஆளும் கட்சியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒப்புதல் அளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையிலேயே குறித்த குற்றப்பத்திரிகை தொடர்பில் ஜனக ரத்நாயக்க தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார். (ம)

# ஜனக ரத்நாயக்கவை நீக்க வருகிறது குற்றப்பத்திரிகை!

## அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 30

பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவிநீக்கம் செய்வதற்கு குற்றப்பத்திரிகை தயாரிக்கப்பட்டு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இவ்வாறு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன நேற்றுத் தெரிவித்தார்.

புதிய மின்சாரக் கட்டணக் கட்டமைப்புக்கு பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கினால், அன்றையதினம் முதல் தடையில்லா மின்சாரத்தை வழங்க முடியும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

உயர்தரப் பரீட்சைக் காலத்தில் தமது உத்தரவை மீறி மின்துண்டிப்பு நடைமுறைப்படுத்தப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அடுத்த இரண்டு நாள்களில் மின்சாரசபைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார். இதையடுத்தே மின்சக்தி அமைச்சர்



காஞ்சன பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்கம் செய்வதற்கு குற்றப்பத்திரிகை தயாரிக்கப்பட்டு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் விரைவில் ஜே.வி.பி.ஆட்சி மலரும்!

## நாட்டைவிட்டு வெளியேறாதீர் என்கிறார் அநுரகுமார

கொழும்பு, ஜன. 30

இலங்கையில் வெகுவிரைவில் ஜே.வி.பி. ஆட்சி அமைக்கவுள்ளதால் தொழில்வல்லுநர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் நாட்டைவிட்டு வெளியேற வேண்டாம் – இவ்வாறு தெரிவித்துள்ளார் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'எமது நாட்டை ஆள்வது யார்? மதுபான தொழிற்சாலை உரிமையாளர்கள், மணற் கடத்தல்காரர்கள், மதுக்கடை உரிமையாளர்கள், கொள்ளையர்கள், குற்றவாளிகள் போன்றவர்களாவர். நெஞ்சில் ஈரம் இல்லாதவர்களால் இந்த நாடு ஆளப்பட்டது. உணர்ச்சியற்ற தலைவர்கள், மக்களின் சம்பளத்தில் கை வைக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

தொழில்முறை பணியாளர்கள் 15 சதவீதம் உள்ளனர். அவர்களின் ஊதியத்துக்கு அதிக வரி விதிக்கப்படுகிறது. வங்கிகளின் உயர்மட்ட அதிகாரிகள் 500 பேர் வரையில் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். கடந்த ஓகஸ்ட் மாதத்தின் போது மருத்துவர்கள் 500 பேர் இந்த நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இவ்வாறு இவர்கள் நாட்டை விட்டுச் செல்வதால் நாடு பெரும் பின்னடைவை எதிர்கொள்ளும். வெகு சீக்கிரமே எமது அரசாங்கம் தோன்றும். எவரும் நாட்டைவிட்டு வெளியேற வேண்டாம்' - என்றார். (ம)

# தேர்தல் கண்காணிப்பு 7,000 பேர் பணியில்!

கொழும்பு, ஜன. 30

உள்ளூராட்சிசபைத் தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்காக 7 ஆயிரம் சுயாதீன கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனத் தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

அடுத்த வாரம் முதல் மாவட்ட ரீதியில் தேர்தல்கள் கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். வாக்கெடுப்பு நாளில் பெரும்பாலான கண்காணிப்பாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படுவர். குறித்த கண்காணிப்பாளர்கள் தேர்தலுக்கு முந்தைய காலப்பகுதி மற்றும் தேர்தலுக்குப் பிந்தைய காலப்பகுதிகளிலும் பணிகளில் ஈடுபடுவர்.

அதேவேளை தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டவரைவு மற்றும் புனர்வாழ்வுப் பணியகம் தொடர்பான சான்றிதழை சபாநாயகர் அங்கீகரித்துள்ளார். அதன்படி தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டம் கடந்த 27ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது என சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். (ச-இ)

# வாக்குச்சீட்டு அச்சிடல் அடுத்தவாரம் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 30

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான வாக்குச்சீட்டுக்களை தயார்ப்படுத்துவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், வாக்குச்சீட்டுகள் அடுத்தவாரம் அச்சிடப்படவுள்ளன என அரச அச்சக அலுவலகம் தெரிவித்துள்ளது.

அச்சிடுதல் தொடர்பான ஆய்வுகள் உள்ளிட்ட அடிப்படைப் பணிகள் நிறைவுறுகின்றன. அச்சுப் பிழைகள், வாக்குச்சீட்டு திருத்தங்கள் உள்ளிட்ட அனைத்தும் மீண்டும் சரிபார்த்து அதன் துல்லியம் ஆய்வுக்குட்படுத்தப்படுகிறது. அதற்கமைய வாக்குச்சீட்டுகள் அச்சடிக்கும் பணி அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளது.

அத்துடன் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குத் தேவையான ஏனைய ஆவணங்களை அச்சிடும் பணி ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என அரச அச்சக அலுவலகத்தின் தலைவர் திருமதி கங்கானி லியனகே தெரிவித்துள்ளார். (ச-இ)

# சீனாவிலிருந்து தண்டவாளம்: இறக்குமதி செய்ய ஏற்பாடு!

நாட்டில் ரயில் சேவைகளை மேம்படுத்த 10 ஆயிரம் ரயில் தண்டவாளங்களை சீனாவிலிருந்து இறக்குமதி செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது என ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் திணைக்களத்தின் பொது முகாமையாளர் டபிள்யூ.ஏ.எஸ்.குணசிங்க தெரிவிக்கையில், அண்மைக்காலமாக ரயில்கள் தடம்புரளும் சம்பவங்கள் அதிகரித்துள்ளமையை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் இரண்டு மாதங்களில் 45 அடி நீளமுள்ள 10 ஆயிரம் தண்டவாளங்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன. இதற்காக ஒரு பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது - என்றார். (ச-இ)

# உள்ளூராட்சி அபிவிருத்திக்கு வெளிநாடுகளிலிருந்து பணம்!

## திட்டம் கைவசம் என்கிறார் சஜித்

கொழும்பு, ஜன. 30

உள்ளூராட்சி மன்றங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதியை ஏற்கனவே வெளிநாட்டு செல்வந்தர்களிடமிருந்து பெற ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.



'தீர்வற்ற நாட்டுக்குத் தீர்வு' எனும் கருப்பொருளில் ஐக்கிய மக்கள் சக்தியால் மகா ஓயாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்;

வெளிநாட்டிலுள்ள செல்வந்தர்களுடன் தொடர்புகொண்டு உள்ளூராட்சி மன்றங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதியை பெற முன்னரே ஏற்பாடுகள் ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தச் செயற்பாட்டின் ஊடாக மத்திய அரசிடம் பணம் இல்லாதுவிடின் கட்சிபேதமின்றி உள்ளூராட்சி மன்றங்களின் பணிகளை முன்னெடுக்க இயலும்.

2019ஆம் ஆண்டில் ஆட்சிப்பீடமேறிய அரசாங்கம் நாட்டு மக்களை ஏமாற்றியது போன்று தற்போதும் நாட்டை அழிக்க அரசியல்வாதிகள் முனைகின்றனர். ஆனால் எம்மிடம் நாட்டின் அபிவிருத்தியை நடைமுறையில் நனவாக்கக் கூடிய திட்டங்கள் கைவசம் உள்ளன. ஒப்பந்தம் போடுவது முதல் அரசியல் 'டீலில்' ஈடுபடுவதுவரை அனைத்து ஊழல் முறைகேடுகளும் எமது ஆட்சியில் களையப்படும் - என்றார். (ச-இ)



# உள்ளூராட்சித் தேர்தல் பெண்கள் பிரதிநிதித்துவம்; தெளிவூட்டல் கருத்தமர்வு!

யாழ்ப்பாணம், ஜன. 30

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் பெண் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் முகமாக 'கபே' அமைப்பின் ஜனனி நிகழ்ச்சித்திட்டத்தின் மூன்றாவது அமர்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் பொதுநூலக மண்டபத்தில் இடம்பெற்றது.

'கபே' அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் சி.தினேஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த அமர்வில் வளவாளராக மஞ்சுள கஜநாயக்க கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார்.

இந்தக் கருத்தமர்வில் தேர்தல் சட்டவிதிமுறைகளுக்கமைய தேர்தல் செலவினங்களை கட்டுப்படுத்தல், பெண் பிரதிநிதித்துவத்தை எவ்வாறு அதிகரித்தல், பெண்களின் விகிதாசார பங்கேற்பை உறுதிப்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (ச-159)

# மொஹமட்டுக்கு பொலிஸ் பாதுகாப்பு

கொழும்பு, ஜன. 30

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினரான எம்.எம்.மொஹமட்டுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் இருந்துவிலக வேண்டும் என்று அவருக்கு தொலைபேசியில் நேற்றுமுன்தினம் இரவு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது என்று கூறப்படுகின்றது.

இந்தத் தொலைபேசி ஊடான அச்சுறுத்தல் தொடர்பில், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடளிக்கப்பட்டதை அடுத்துப் பொலிஸ் பாதுகாப்பு அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வருட சிறுபோகத்தில்

# நெற்செய்கைக்கு மேலதிகமாக தானியங்களுக்கு முன்னுரிமை!

### விவசாய அமைச்சு தெரிவிப்பு

**கொழும்பு, ஜன. 30**
**இந்த வருட சிறுபோகத்தில் நெற்செய்கைக்கு மேலதிகமாக ஏனைய பயிர்களையும் தானியங்களையும் பயிரிடுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் விவசாய அமைச்சு விடுத்து அறிக்கையில் உள்ள தாவது:
இந்தவருடம் மேற்கொள்ளப் படவுள்ள சிறுபோகத்தில் நெற் செய்கை மட்டுமல்லாது ஏனைய பயிர்ச்செய்கைகளைப் பயிரிடு வதற்கும் முன்னுரிமை அளிக் கப்படும். இதற்கான இரசாயன உரத்தை தட்டுப்பாடு இன்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.
பெரும்போகத்தில் சேதன உரங் களைக் கொள்வனவு செய்வ தற்கு 16 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. நெல் சாகுபடி செய்யப்படும் ஒரு ஹெக்ரேயர் நிலத்துக்கு இருபதா யிரம் ரூபா வீதம் வழங்க நடவ டிக்கை எடுக்கப்பட்டது.
அத்துடன், சேதன உரங்களை விநியோகிப்பதற்காக நாடளாவிய ரீதியில் அனைத்து மாவட்டங்க ளையும் உள்ளடக்கிய வகையில் மாவட்ட குழுக்கள் அமைக்கப்பட வுள்ளன - என்றுள்ளது. (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பாராத செலவுகளை சமாளித்துவிடுவீர்கள்.

**இடபம்:** உடல் ஆரோக்கியம் மேம்ப டும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். காரி யங்கள் அனுகூலமாக முடியும்.

**மிதுனம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். திடீர் செலவுகள் ஏற்ப டக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். செலவுகள் ஏற்படக்கூடும். பணிகளை பகிர்ந்துகொள்வார்கள்.

**கடகம்:** தாய்வழியில்எதிர்பார்த்தகாரியம் இழுபறியாக முடியும். காரியங்களில் வெற்றியும்உண்டாகும். புதியமுயற்சியை தொடங்குவது நல்லது. வாகனத்தில் எதிலும் அலட்சியம் வேண்டாம்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செல வுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும். குழப்பம் ஏற்படக்கூடும்.

**கன்னி:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்க வும். வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் வார்த்தைகளில் நிதானம் தேவை.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்புஉண்டு. ஆதாயம் உண்டாகும். செலவு செய்யவேண்டி வரும். உற வினர்களால் சங்கடங்கள் ஏற்படும். சில தடைகள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். கூடியவரை இன்று புதிய முயற்சி எதையும் மேற்கொள்ள வேண்டாம்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். கணவன் மனைவிக்கிடையே அந்நி யோன்யம் அதிகரிக்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டா கும். உங்கள் முயற்சிகளுக்கு சகோ தரர்கள் ஆதரவாக இருப்பார்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**கும்பம்:** மனதில் உற்சாகம் பெருக்கெ டுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்து டன் குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** மனதில்தைரியமும்உற்சாகமும் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாத கமாக முடியும். தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும்.

# வங்காள விரிகுடாவில் தீவிரமாகும் தாழமுக்கம்

### மீனவர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 30
வங்களா விரிகுடாவின் தென் கிழக்கு கடற்பிராந்தியத்துக்கு மேலாகத் தாழமுக்கம் நிலை கொண்டுள்ளதுடன் இந்தத் தாழமுக்கம் நாளை தீவிரம டைந்து வங்காள விரிகுடாவின் தென்மேற்குப் பகுதியில் நிலை கொள்ளவுள்ளது. எனவே மீனவர்கள் கடலுக்குச் செல் வதைத் தவிர்க்கவேண்டும் என வளிமண்டலவியல் திணைக்க ளம் அறிவுறுத்தியுள்ளது.
வளிமண்டலவியல் திணைக்க ளத்தால் இது தொடர்பில் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கை யில் மேலும் உள்ளதாவது:
சப்ரகமுவ மாகாணத்திலும் கண்டி, நுவரெலியா, களுத் துறை, காலி மற்றும் மாத் தறை மாவட்டங்களிலும் இடி யுடன் கூடிய மழை இரவிலோ அல்லது மாலை வேளை யிலோ பெய்யக்கூடும்.
வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் ஓரளவு மழை பெய்யக்கூடும். இடியு டன் கூடிய மழை பெய்யும் தருணங்களில் தற்காலிக பலத்த காற்று மற்றும் மின் னல் தாக்கங்கள் ஏற்படக் கூடிய சாத்தியங்கள் உள்ளன.
இந்த ஆபத்துக்களை குறைத் துக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை பொதுமக் கள் மேற்கொள்ளுமாறு அறி வுறுத்தப்படுகிறது- என்றுள் ளது. (ச-இ)

# விஞ்ஞானமாணி கற்கை விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜன. 30
திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் விஞ்ஞான மாணிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.
கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 18 வய துக்கு மேற்பட்டவராக இருப்பதுடன் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கணிதம் மற்றும் உயிரியலில் மூன்று பாடங் களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பிக்க முடியும்.
விண்ணப்பிப்பதற்கான காலஎல்லை எதிர்வரும் மார்ச் 3ஆம் திகதியுடன் நிறைவுறுத்தப்படும் என யாழ்.பிராந் திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச)



# பிரதேசசபைக்கு புதிய உறுப்பினர்

வவுனியா, ஜன. 30
வவுனியா தெற்கு தமிழ் பிர தேசசபைக்கு புதிய உறுப்பி னர் நியமிக்கப்பட்டுள்ளார்.
வவுனியா தெற்கு தமிழ் பிர தேசசபையில் தமிழீழ விடு தலை இயக்கத்தின் உறுப் பினராக அங்கம் வகித்த து.நடராஜசிங்கம் அண்மை யில் உயிரிழந்தார்.
அதனையடுத்து அவரது இடத்துக்கு ஏற்பட்ட வெற்றிடத் துக்கு தமிழீழ விடுதலை இயக் கத்தின் வவுனியா மாவட்ட அமைப்பாளராகக் கடமை யாற்றிய விஜயகுமார் புரூஸ் கடந்த வெள்ளிக்கிழமை நிய மிக்கப்பட்டார். நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகரா தலிங்கம் முன்னிலையில் அவர் பதவியேற்புக்கான உறுதியுரையை ஏற்றுக் கொண்டார். (ம-14,110)

# சாவகச்சேரி மருத்துவமனைக்கு குழந்தைநல நிபுணர் நியமிப்பு

சாவகச்சேரி, ஜன. 30
சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு குழந் தைகள் நல மருத்துவ நிபுணராக மருத்துவர் கஸ்தூரி நியமிக்கப்பட்டுள்ளார்.
குழந்தைகள்நல மருத்துவ நிபுணர் இன்மை யால் பிரதேசத்தில் போசாக்கின்றிய குழந்தை கள் அதிகளவில் பதிவாகி வருகின்றன என மருத்துவமனை நிர்வாகத்தால் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டப்பட்டது.
அதற்கமைய சுகாதார அமைச்சால் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு குழந்தைகள் நல மருத்துவ நிபுணரான மருத்துவர் கஸ்தூரி நியம னம் செய்யப்பட்டுள்ளார். (ச-9)

# கலைஞர்களின் படைப்புகளை ஊக்குவிப்பதற்கு செயற்றிட்டம்

### கலாசாரப் பேரவையால் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 30
யாழ்ப்பாண பிரதேச செயலகப் பகுதி யில் வசிக்கும் கலைஞர்கள், எழுத் தாளர்களின் படைப்புக்கள் மற்றும் இலத்திரனில் வெளியீடுகள் உள்ளிட் டவற்றை ஊக்குவிக்கும் செயற்றிட் டம் முன்னெடுக்கப்படவுள்ளது.
வடக்கு மாகாண பண்பாட்டலுவல் கள் திணைக்களத்தின் கலாசார செயற்றிட்டத்தின் ஊடாக இந்தச் செயற்றிட்டத்தை கலாசாரப் பேரவை முன்னெடுத்துள்ளது. இந்தத் திட்டத் துக்கு தரமதிப்பீட்டுக்குழுவின் தீர்மா னத்துக்கமைய கலைஞர்கள் தெரிவு செய்யப்படுவர்.
தகுதியானவர்கள் அந்தந்தப் பிரதேச செயலக கலாசாரப் பிரிவுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளு மாறு யாழ்ப்பாண பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன் அறிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வரலாற்றுத் தீர்ப்பு

'தமிழர்கள் என்ற ஒரு காரணத்துக்காக மட்டும், இளைஞர்கள் மீது பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்தி பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யக் கூடாது'

இவ்வாறான வரலாற்று முக்கியத்துவமான தீர்ப்பொன்றைக் கடந்த 26ஆம் திகதி வழங்கியிருக்கிறது கொழும்பு மேல் நீதிமன்றம்.

2015ஆம் ஆண்டு ஜூன் 16ஆம் திகதி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தங்கராசா கார்த்திகேசு என்பவரது வழக்கு விசாரணையின் போது, சந்தேநபர் தன்மீதான குற்றச்சாட்டுகளை மறுத்திருந்தார். பொலிஸார் அவரைப் போதைப் பொருள் வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் பிடித்திருந்தாலும், அந்தக் கைது பின்னர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழானதாக மாற்றப்பட்டது. போதைப்பொருள் வைத்திருந்த ஒருவரைக் கைதுசெய்ய பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பிரயோகித்தமையானது மிகப்பெரிய தவறு என்றும், தமிழர் என்ற ஒரே காரணத்துக்காக எல்லாக் குற்றங்களுக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் கைது செய்வதை ஏற்றுக்கொள்ளவே முடியாது என்றும் தெரிவித்து, கடந்த 7 வருடங்களாகச் சிறையில் இருந்த தங்கராசா கார்த்திகேசுவை நீதிபதி பட்டபெண்டிகே விடுவித்தார். சட்டங்கள் பற்றிய அடிப்படைப் புரிதல் கூட இல்லாமல் , ஓர் இளைஞரை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து, அவரது வாழ்க்கையில் 7 வருடங்களை இல்லாமலே செய்திருக்கின்றனர் பொலிஸார். இதனால் இன்னும் கோபமடைந்த நீதிபதி 'என்னென்ன குற்றங்களுக்கு என்னென்ன சட்டத்தைப் பிரயோகித்து தண்டனை வழங்கலாம் என்பதை பொலிஸ்மா அதிபருக்குத் தெரியப்படுத்துங்கள்' என நீதிமன்றப் பதிவாளருக்கும் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு இலங்கையில் சிறைப்பறவைகளாக பலவருடங்கள் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் வாழ்வியலின் ஒரு குறுக்கு வெட்டு முகமே. தங்கராசா கார்த்திகேசுவைப் போலவேதான் பல தமிழ் இளைஞர்கள் செய்யாத குற்றத்துக்காக, தமிழர்கள் என்ற ஒற்றைக்காரணத்துக்காக 'பயங்கரவாதத் தடைச்சட்டம்' ஏவி விடப்பட்டதால் விடிவின்றி இன்னமும் சிறைக்கம்பிகளுக்குள் தங்கள் உலகத்தைச் சுருக்கிக் கொண்டு வாழவேண்டிய துர்ப்பாக்கியம். வழக்கு விசாரணைகள் எதுவுமின்றி அவர்கள் சிறைக்குள் தள்ளப்பட்டு, எப்போது விடிவுவரும் என்ற ஏக்கத்தோடுதான் ஒவ்வொரு காலையிலும் அவர்கள் கண்விழிக்கிறார்கள். சீராக வழக்கு விசாரணைகள் நடத்தப்பட்டிருந்தால் அவர்கள் எல்லோரும் எப்போதோ விடுவிக்கப்பட்டிருப்பார்கள். ஆனாலும் பேரினவாத அரசாங்கம் அப்படி அவர்களை இலகுவாக விடுவிக்கத் தயாராக இருக்கவில்லை. அதனாலேயே வழக்கு விசாரணைகள் இழுத்தடிக்கப்படுகின்றன. சிலர் எவ்வித் விசாரணையுமின்றியும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இப்படிப்பட்ட நிலையில்தான், 'தமிழர்கள் என்பதற்காக கண்ணைமூடிக்கொண்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பிரயோகித்து அவர்களைக் கைது செய்யமுடியாது' என்று நீதியின் குரலை உரத்து ஒலிக்கவிட்டுள்ளார் நீதிபதி பட்டபெண்டிகே.

போர் முடிவுக்கு வந்தபின்னர் கூட, தமிழ் மக்களை 'பயங்கரவாதத் தடைச்சட்டம்' என்ற பூச்சாண்டியைக் காட்டி சிங்களப் பேரினவாத அரசாங்கம் அடக்கி, ஒடுக்கி, வெருட்டி வைத்திருந்தது; வைத்திருக்கின்றது. திலீபனுக்கு தீபம் ஏற்றி அஞ்சலித்தமைக்குக் கூட இறந்த ஒருவரை நினைவேந்தினால் கூட கையிலே விலங்கோடு பயங்கரவாதத் தடைச்சட்டம் பல்லிளித்துக் கொண்டுபாய்ந்துவிடும். நாடாளுமன்றமுன்னாள்உறுப்பினர்சிவாஜிலிங்கம் மீது இவ்வாறான நினைவேந்தல் குற்றச்சாட்டுக்காக பயங்கரவாதத்தடைச்சட்டம்ஏவிவிடப்பட்டு, அது தொடர்பான வழக்கு விசாரணைக்காக கொழும்பு மேல் நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டிருக்கிறார். (அதே நீதிமன்றில் தான், மேற்படி வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது) முதலில் தமிழர்கள் மீது மட்டுமே பாய்ந்து கொண்டிருந்த இந்தச் சட்டம் ஈஸ்டர் தாக்குதலோடு முஸ்லிம்கள் மீதும், 'அரகலய' போராட்டத்தின் பின்னர் சிங்கள இளைஞர்கள் மீதும் சகட்டுமேனிக்கு பாயத்தொடங்கிவிட்டது. இனிமேலும் தன்னிஷ்டப்படி பயங்கரவாதத் தடைச்சட்டம் , அதிகாரத்துக்கு எதிராகக் குரலெழுப்புவோரை வேட்டையாடுவதை அனுமதிக்கமுடியாது என்பதையே, மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பு எடுத்துக்காட்டுகிறது.

செய்யாத குற்றத்துக்காக, பொருத்தமேயில்லாத கொடூரச்சட்டத்தின் கீழ் சிறைவாசத்தை அனுபவித்துவிட்டு வெளியே வந்துள்ள தங்கராசா கார்த்திகேசு போன்று, இன்னமும் சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு இந்தத் தீர்ப்பு ஒரு தொடக்கப்புள்ளியாக இருக்கவேண்டும் என்பதே எல்லோரினதும் எதிர்பார்ப்பு. அதனை நீதித்துறை காப்பாற்றுமா?

## நாளொரு நல்வார்த்தை

உங்களால் நம்பிக்கையுடன் கனவுகாண முடியும் என்றால், கனவில் கண்டதை நிஜத்திலும் செயற்படுத்தி செய்து முடிக்க முடியும். – பில்கேட்ஸ்



# தொழுநோயாளர்களில் 10 வீதத்தினர் சிறுவர்கள்

கொழும்பு, ஜன. 30

இலங்கையில் தொழுநோயின் தாக்கம் அதிகரித்து வருகின்றது என்றும், தொழுநோயால் பாதிக்கப்படுபவர்களில் 10 வீதமானவர்கள் சிறுவர்கள் என்றும் கொழும்பு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ நிபுணர் சந்தன கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

உலகளாவிய ரீதியில் தொழுநோய்தினம் நேற்று ஞாயிற்றுக்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது. அதனை முன்னிட்டு கொழும்பில் நடத்தப்பட்ட மக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கருத்துரைக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:-

தொழுநோய் ஒழிக்கப்பட்ட நாடாக இலங்கை சான்றிதழ் பெற்ற போதிலும் கடந்த 2022ஆம் ஆண்டு ஆயிரத்து 325 பேர் தொழுநோயாளிகளாக பதிவாகியுள்ளனர் என தொழுநோய் கட்டுப்பாட்டு இயக்கம் அறிவித்துள்ளது. அதன்படி இலங்கையில் வருடாந்தம் சுமார் 2 ஆயிரம் தொழுநோயாளர்கள் பதிவாகுகின்றனர். பதிவாகும் நோயாளிகளில் 10 வீதமானவர்கள் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள். உடலில் தோலின் நிறத்தைவிட சந்தேகத்துக்கிடமான புள்ளிகள் தென்பட்டால் உடன் அருகிலுள்ள மருத்துவமனையை நாடி பரிசோதனை மேற்கொள்ளவேண்டும். அவ்வாறு செயற்படுவதன் மூலம் தொழுநோயிலிருந்து நாம் ஆரோக்கியமாக இருக்கலாம் - என்றார். (ச-இ)

# இலங்கைக்குள் அலைபேசி கொண்டுவருவதற்குத் தடை

கொழும்பு, ஜன. 30

வெளிநாடுகளில் இருந்து இலங்கை வருகின்றவர்கள் மேலதிக அலைபேசிகளைப் பதிவு செய்யாமல் கொண்டு வருவதற்குத் தடை விதிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

அலைபேசி இறக்குமதியாளர்கள் செய்த முறைப்பாடுகளின் அடிப்படையில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழில்துறை அமைச்சர் மனுஷ நாணயக்கார இதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளார். வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்புகின்ற இலங்கையர்கள் மேலதிக அலைபேசிகளைக் கொண்டுவருவதன் காரணமாகப் பெரும் வரி வருமானம் அரசாங்கத்துக்கு கிடைக்காமல் போகின்றது என்று அலைபேசி இறக்குமதியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அலைபேசி இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டதை அடுத்து, இவ்வாறு வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகின்றவர்கள் ஊடாகப் பெருமளவில் கைபேசிகள் கொண்டு வரப்பட்டன என்றும், அதனால் 200 மில்லியன் டொலருக்கும் அதிகமான இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)

**நாளை** 31.01.2023 செவ்வாய்க்கிழமை தை 17
சுபநேரம் : 11.06 - 12.36
ராகுகாலம் : 03.36 - 05.06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு

2022ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் நேற்று முன்தினம் புதன்கிழமை வெளியிடப்பட்டன. கிடைக்கப்பெற்ற பாடசாலைகள் சிலவற்றின் பரீட்சை முடிவுகள் வருமாறு...

### கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்

ச.விவிதன் -151

### கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை

கி.ஸ்ரெலா -151, தி.அகல்யன் -145

### போக்கட்டி அ.த.க. பாடசாலை

வ.சானுஜா -150

### மாசார் அ.த.க. பாடசாலை

து.தக்சனா -176, வி.திஸ்ரிகா -172, ர.டெனிசியா -168, ந.அஞ்சனா -145, த.லோகிதன் -145, சு.ஆரன்யா -143

### அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம்

செ. கிருஷிகா -153, சி.மினாசோன் -148 , உ.அஜினா -145

### கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்

சி.கபிஸ்ரா -150, ச.அப்சயன் -148, ரா.நிருஜனன் -147

### கைதடி குருசாமி வித்தியாலயம்

ம.கவினிகா -153, சி.சயந்தவி -149

### சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி

பு.சர்மிகா -162, மோ.தர்வின் -149

### பளை இந்து ஆரம்ப வித்தியாலயம்

ச.அட்சயா -173, க.கோபிகா -165, ம.மதுசன் -164, பா.யன்சிகா -164, கே.மிதுரிகா -162, அ.சஜெந்தா -159, ரா.ரக்சிதா.-158, ஜெ.தனாதிபன் -157, நே.கபிநயா -156, தி.சகிராம் -153, வி.யனிஸ்ரன் -150, ச.அன்றியா -148, சி.தனுஸ்கா -147

### கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலை

பி.டியானிக்கா -146, வி.வினித்தா -144, செ.கிருத்திகன் -143, கா.வினுஸ்கா -143



2022ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் கிளி/ மாசார் அ.த.க.பாடசாலை மாணவி து.தக்சனா 176 புள்ளிகள் பெற்று கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தில் முதலிடத்தைப் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். (ய-159)

## கசிப்புடன் 2பேர் கைது

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதகல் சம்புநாத பெருமான் ஆலயத்துக்கு அருகாமையிலிருந்து 10 லீற்றர் கசிப்புடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இளவாலை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரையும் மேலதிக விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-27)

## கசிப்புடன் நேற்று இளைஞர் கைது

யாழ்ப்பாணம் - நிலாவரைப் பகுதியில் 3 லீற்றர் கசிப்புடன் இளைஞர் ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார் என்று காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப்பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 36 வயதுடையவர். அவர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். மேலதிகவிசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் நீதிமன்றத்தில் முற்படுத்தப் படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-23)

## வவுனியா

## பண்டாரிக்குளம் விபுலானந்தக் கல்லூரியில் புலமைப்பரீட்சையில் 31 மாணவர்கள் சித்தி

கடந்த புதன்கிழமை வெளியாகிய புலமைப்பரிசில் பரீட்சையில் வவுனியா பண்டாரிக்குளம் விபுலானந்தக் கல்லூரியில் 31 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெறுபேற்றை பெற்று சித்தியடைந்துள்ளனர்.

வெட்டுப்புள்ளிக்கு மேல் பெறுபேற்றைப் பெற்று 31 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதுடன் 100 - 141 புள்ளிகளுக்கிடையே 116 மாணவர்களும், 70 -99 புள்ளிகளுக்கிடையே 136 மாணவர்களும் 70 புள்ளிகளுக்கு கீழ் 4 மாணவர்களும் பெறுபெற்றைப் பெற்றுள்ளனர். புலமைப்பரீட்சைக்கு 140 மாணவர்கள் தோற்றி, 97 என்ற சித்தி விகிதத்தை பாடசாலை பெற்றுள்ளது. (ய-18)

## கட்டணத்தைச் செலுத்தி துண்டிப்பைத் தவிர்க்குக

### நீர் வடிகாலமைப்புச்சபை அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 30

மாதாந்த தண்ணீர்க் கட்டணப் பட்டியலை ஒருமாதத்துக்கு மேல் செலுத்தாது இருப்பின் அவர்கள் உடனடியாக கட்டணத்தைச் செலுத்தவேண்டும். தவறும்பட்சத்தில் இணைப்புத் துண்டிக்கப்படும் என தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ். பிராந்திய அலுவலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

மாதாந்த நீர்க் கட்டணப் பட்டியலை ஒரு மாதத்துக்கு மேல் செலுத்தாது இருப்பின் அவர்கள் உடனடியாக செலுத்தவேண்டும். தவறும் வாடிக்கையாளரின் நீர் இணைப்பை துண்டிப்பதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை நடவடிக்கை எடுத்துள்ளது. எனவே யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த வாடிக்கையாளர்கள் உடனடியாக தங்கள் மாதாந்த நீர்க் கட்டணத்தை செலுத்தி நீர் இணைப்பு துண்டிக்கப்படுவதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள் - என்றுள்ளது. (ச-214)

## இலக்கத்தகடுப் பட்டியல் மக்களுடைய பார்வைக்கு

யாழ்ப்பாணம், ஜன. 30

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத் தலைமை அலுவலகத்திலிருந்து கடந்த 26ஆம் திகதி யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்கள அலுவலகத்துக்கு வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல் கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்தப் பட்டியல், யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேசசெயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் மாவட்டச்செயலக இணையத்தளத்திலும் பட்டியலைப் பார்வையிடலாம். (ச)

## ஹெரோய்னுடன் கைதான பெண் விளக்கமறியலில்!

யாழ்ப்பாணம், ஜன. 30

3 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளுடன்கைதான பெண்ணை எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து 3 கிராம் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில், 32 வயதான குறித்த பெண் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டு கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவர் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோதே, விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-23)

## பெண்களுக்குப் பெண்கள் வாக்களிக்க வேண்டும்!

### 'கபே' கூட்டத்தில் வலியுறுத்து

கிளிநொச்சி, ஜன. 30

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் பெண்களுக்குப் பெண்கள் வாக்களிக்க வேண்டும் என்று 'கபே' அமைப்பின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட தேர்தல் விழிப்புணர்வுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தேர்தல்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்று 'கபே' அமைப்பின் ஏற்பாட்டில் கிளிநொச்சி கூட்டுறவுச்சபை மண்டபத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கி பெண் வேட்பாளர்கள் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள் இதில் கலந்துகொண்டனர்.

இதன்போதே பெண்கள் பெண் வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இளைஞர்களை இரையாக்கும் போதை என்னும் பேரரக்கன்!



ந.ரிலக்ஷனா
4ஆம் வருட மாணவி
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

போதைப்பொருள்களின் பயன்பாடு தற்போது எங்கும் விரவியிருக்கின்றது. இதன் பாதிப்புக்கள் மற்றும் பிறழ்வுகள் தனிமனிதன், சமுதாயம் என பல வகைகளிலும் வியாபித்திருக்கின்றன. போதைப்பொருள்களில் மதுபானம், புகையிலை, அபின், ஹெரோய்ன், கஞ்சா, போதை தரும் இன்ஹேலர்கள் எனப் பல வகைகள் உள்ளன. சம வயதுக் குழுக்கள் முதல் வழிதவறச் செய்யும் சமூக ஊடகங்கள்வரை பிள்ளைகளின் நடத்தைப் பிறழ்வுகளுக்குக் காரணமாக அமைந்துள்ள இக்காலகட்டத்தில் எந்தப் பிள்ளை எத்தகைய நடத்தைக் கோலங்களைக் கொண்டுள்ளது?. எத்தகைய நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வருகிறது என்பதைப் பெற்றோரால் கண்டுகொள்ள முடியாத அளவுக்குப் பிள்ளைகளின் செயற்பாடுகள் மாறிவிட்டன. எதிர்பார்க்க முடியாத சம்பவமொன்றில் பிள்ளை சம்பந்தப்படுகின்றபோதுதான் பெற்றோரால் அந்தப் பிள்ளையின் உண்மை முகத்தை அடையாளம்காண முடிகிறது.

திசைமாறிப் பயணிக்கும் புதிய தலைமுறையினர் குறித்த அவதானம் சமூகப் பொறுப்பாக்கப்பட வேண்டும் என்பது காலத்தின் அறைகூவலாகவுள்ளது. ஏனெனில், நாளைய தலைவர்களாக, துறைசார் வல்லுநர்களாக, நிபுணர்களாக, சமூகத்தையும், பிரதேசத்தையும், நாட்டையும் நல்வழிப்படுத்துபவர்களாக எதிர்காலத்தில் மிளிரவுள்ள புதிய தலைமுறையினர்; நற்பண்புகளுடன் ஆரோக்கியமாக வாழ்வதற்கு வழிகாட்டுவது அவசியமாகும். பெற்றோர், ஆசிரியர்கள் உட்பட ஒட்டுமொத்த சமூக உறுப்பினர்களும் இந்தப் பொறுப்பைச் சுமக்க வேண்டியுள்ளது. தவறும்பட்சத்தில், ஆரோக்கியமற்ற, சமூகவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடக் கூடிய சமூகமொன்றையே நாம் எதிர்காலத்தில் காணமுடியும்.

### நவீனங்களும் நெறிபிறழ்வும்

அறிவு மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி போன்ற காரணங்களால் எவையெல்லாம் நவீன கலாசாரமென்று அறிமுகப்படுத்தப்படுகிறதோ, அவையெல்லாம் அநாகரிகமாக மாறி, புதிய தலைமுறையினரை வழிதவறிப் பயணிக்கச் செய்து கொண்டிருக்கிறது. நவீன கலாசார மோகத்துக்குள் தள்ளப்பட்டுள்ள இளைஞர், யுவதிகள் தங்களைத் தாங்களாகவே அழித்துக்கொள்வதையறியாது மெல்லமெல்ல அழிந்துகொண்டிருக்கிறார்கள். சமூக வலைத்தளங்கள் மற்றும் தொலைபேசிப் பாவனை, போதைப் பயன்பாடு என்பவற்றுக்கு அடிமையாகி கால நேரத்தையும், பணத்தையும் வீண் விரயம்செய்து, அழிவினதும், ஆபத்தினதும் விளைவுகளை விளங்கிக் கொள்ளாமல் அல்லது விளங்கியும் அவற்றிலிருந்து விடுபட்டுக்கொள்ள முடியாமல் மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருக்கும் இளைஞர்கள் இன்றும் ஏராளம்.

அபினி என்பது போதையூட்டுகிற, வலிநீக்கி மருந்துப்பொருள் ஆகும். இது அபினிச் செடியில் இருந்து பெறப்படுகின்றது. அபினி வலிமையான போதையூட்டும் இயல்புகளைக் கொண்டது. இதிலுள்ள சேர்பொருள்களும், இதிலிருந்து பெறப்படும் பொருள்களும், வலிநீக்கிகளாகப் பயன்படுகின்றன. இதனால், சட்டத்துக்கு அமைவான அபினி உற்பத்தி, ஐக்கிய நாடுகள் அமைப்பினதும், வேறு சர்வதேச ஒப்பந்தங்களாலும் கட்டுப்படுத்தப்படுவதுடன், தனிப்பட்ட நாடுகளின் சட்ட அமுலாக்க அமைப்புக்களின் கடுமையான கண்காணிப்புக்கும் உட்படுகின்றது. ஆனால், அது சட்டத்தை மீறிய வகையில் இன்று போதைக்காகப் பயன்படுத்தத் தொடங்கியிருப்பது துயரம்.

மேலும் ஐஸ் மற்றும் ஹெரோய்ன் போன்ற உயிர்கொல்லி போதைப்பொருள்களின் பாவனை யாழ்ப்பாணத்தில் திடீரென அதிகரித்துள்ளது. இந்தப் பழக்கம் பெரும்பாலும் 18 வயது தொடக்கம் 23 வயதுக்கு இடைப்பட்டவர்களிடமே அதிகமாகக் காணப்படுகிறது. இவ்வாறான போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் சிறிய வகை ஊசிகள் மூலம் தமது இரத்த நாளங்களின் ஊடாக போதைப்பொருளை உட்செலுத்திக் கொள்கின்றனர். இவ்வாறு ஊசி மூலம் போதைப்பொருளை உட்செலுத்துவதனால் கிருமித்தொற்றுக்கள் ஏற்படுவதன் ஊடாகவும், அதிகளவான போதைப் பொருளை உட்செலுத்துவதாலும் இறப்புக்களும் சம்பவிக்கின்றன. யாழ்ப்பாணத்தில் அதிகளவானோர் போதைப்பொருள் தொடர்பிலான வழக்குகளுக்காக சிறையில் தடுத்து வைக்கப்பட்டனர். எனினும் போதை என்ற பேரரக்கனை இன்னமும் முழுமையாக அழித்தபாடில்லை. அத்துடன் போதைப்பொருள் பாவனையில் இருந்து மீள்வதற்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு வாராந்தம் சராசரியாக 30 பேர் சிகிச்சைக்கு வருவதாகவும் அவர்களில் பெரும்பாலானோர் மாணவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### எங்கிருந்து வருகின்றன

இலங்கையில் தெற்கிலிருந்து வடக்குக்கும், வடக்கிலிருந்து தெற்குக்கும் போதைப்பொருள் கடத்தப்படுகின்றது. தெற்கில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு உட்பிரவேசிப்பதற்கு இரண்டு தரைவழிப் பாதைகளே காணப்படுகின்றன. ஒன்று யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலை மூலம் ஆனையிறவு ஊடாக மற்றையது யாழ்ப்பாணம் - மன்னார் நெடுஞ்சாலை மூலம் சங்குப்பிட்டி ஊடாக. ஆனையிறவு மற்றும் சங்குப்பிட்டி பகுதிகளில் இராணுவ மற்றும் காவல்துறை சோதனைச் சாவடிகள் காணப்படுகின்றன. அவற்றில் சந்தேகத்துக்கு இடமான முறையில் பயணிக்கும் வாகனங்கள் பரிசோதிக்கப்படும் நடைமுறை இன்றும் உள்ளது. அவற்றினைத் தாண்டியே யாழ்ப்பாணத்துக்கும், யாழ்ப்பாணத்திலிருந்து தெற்குக்கும் போதைப்பொருள் கடத்தப்படுகின்றன. அவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவரப்படும் போதைப்பொருள் யாழ்ப்பாணத்தில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட முகவர்கள் ஊடாக யாழ்ப்பாணத்தின் சகல பகுதிகளுக்கும் விநியோகிக்கப்படுகின்றன. பாடசாலை மாணவர்கள், தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லும் மாணவர்களே பெரும்பாலான போதைப்பொருள் முகவர்களின் இலக்காக உள்ளனர்.

மாணவர்களை இலக்கு வைத்தே வியாபாரம் மேற்கொள்ளப்படுகின்றது. அவற்றில் சில எமக்குத் தெரியவருகின்றன. பல தெரியவருவதில்லை.

## தடுப்பது எவ்வாறு?

போதைப்பொருளைத் தடுப்பதற்கான பொறிமுறைகளாக மறுவாழ்வு மையங்கள் இருந்தால் மட்டும் போதாது. அதைத்தாண்டிய நடவடிக்கைகளும் நகர்வுகளும் அவசியமானவையாகவும் தவிர்க்க முடியாததையாகவும் இருக்கின்றன. போதைப்பொருளைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின், அது வருகின்ற பாதையை இனங்கண்டு அதைத் தடுப்பதற்கு ஆத்மார்த்தமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

போதைப்பொருளை உடைமையில் வைத்திருப்போரைக் கைதுசெய்வதுடன் நின்றுவிடாது, பிரதான சூத்திரதாரிகளைக் கைதுசெய்ய வேண்டும். போதைப் பொருள் கலாசாரத்துக்கு எங்கிருந்து விதைபோடப்படுகின்றதோ அதை அழித்தொழித்தால்தானே போதையைக் கட்டுப்படுத்துவதற்கான ஆகச்சிறந்த நடவடிக்கையாக அமையமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

103 உறுப்பினர்களைத் தெரிவுசெய்ய

# 1,580 வேட்பாளர்கள்; வவுனியாவில் களத்தில்!

வவுனியா, ஜன. 30

வவுனியாவில் 103 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக ஆயிரத்து 580 வேட்பாளர்கள் தேர்தலில் களமிறங்கியுள்ளனர்.

எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்கும் பணி கடந்தவாரம் முற்றுப்பெற்றது. இந்தநிலையில் வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள ஐந்து உள்ளூராட்சி மன்றங்களிலும் போட்டியிடுவதற்காக வேட்புமனுக்களை தாக்கல் செய்த 53 அரசியல் கட்சிகள் மற்றும் 13 சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

அந்தவகையில் குறித்த கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த ஆயிரத்து 580 வேட்பாளர்கள் இம்முறை தேர்தலில் களமிறங்கியுள்ள நிலையில் அவர்களைத் தெரிவுசெய்வதற்காக ஒரு லட்சத்து 26 ஆயிரத்து 915 வாக்காளர்கள் தகுதிபெற்றுள்ளனர்.

குறிப்பாக வவுனியா மாநகரசபையில் 20 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக 20 ஆயிரத்து 846 வாக்காளர்களும், வவுனியா வடக்கு பிரதேசசபையில் 23 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக 14 ஆயிரத்து 533 வாக்காளர்களும், வவுனியா தெற்கு சிங்கள பிரதேசசபையில் 16 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக 11 ஆயிரத்து 417 வாக்காளர்களும், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையில் 26 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக 61 ஆயிரத்து 647 வாக்காளர்களும், வெங்கல செட்டிகுளம் பிரதேசசபையில் 18 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக 18 ஆயிரத்து 472 வாக்காளர்களும் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர். தேர்தலுக்கான பூர்வாங்க ஏற்பாடுகளை வவுனியா மாவட்ட தேர்தல்கள் திணைக்களம் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-110)

## மரண அறிவித்தல்

தோற்றம் 11.07.1936



மறைவு 29.01.2023

### திரு.சின்னத்தம்பி இலகுநாதர்

கைதடி கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சின்னத்தம்பி இலகுநாதர் நேற்று (29.01.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், விசிதரன்(குபாலகம், கைதடி), காலஞ்சென்ற விஜயரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுபாசினியின் அன்பு மாமனாரும், அக்ஷிதா(மாணவி.சா/ இந்துக் கல்லூரி), அஸ்வினி(மாணவி.யா/ வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும் காலஞ்சென்றவர்களான முருகேசு, நாகமுத்து, நமசிவாயம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நடராசா, பாக்கியம் மற்றும் காலஞ்சென்றவர்களான செல்வலட்சுமி, தவமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(30.01.2023) திங்கட்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி கிழக்கு,
கைதடி.

தகவல்:
இ.விசிதரன்(மகன்)
077 0724 119
077 0455 909

Maths Personal & Group Classes
B.Thusanthan
(Undergraduate - BSc)
Contort No.: 076 308 8170
Grade: 6, 9, 10, 11
(Combained Maths)

## மரண அறிவித்தல்

பிறப்பு 26.07.2009



இறப்பு 29.01.2023

### செல்வன் சதீஸ்குமார் லதீபன் (லது)

புங்குடுதீவு 1 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் சதீஸ்குமார் லதீபன் (லது), நேற்று (29.01.2023) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் சதீஸ்குமார் சுகந்தினி தம்பதியரின் பாசமிகு புதல்வனும், வசந்தகுமார் (கௌரவ உறுப்பினர் வேலணை பிரதேசசபை), சகுந்தலா, சுந்தரலிங்கம், கமலாம்பிகை ஆகியோரின் அன்புப் பேரனும், கனிஷ், டிருஷா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புங்குடுதீவு,
077 171 6515

தகவல்:
க.வசந்தகுமார் (பேரன்),
வ.சதீஸ்குமார் (தந்தை),

(cs 23191) (2/6)

## மரண அறிவித்தல்



### திருமதி சரஸ்வதி அருணாசலம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வாழ்விடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி அருணாசலம் நேற்று (29.01.2023) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் கனிஸ்ட புதல்வியும், வைத்திலிங்கம் தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அருணாசலம் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா ஆறுமுகம், இரத்தினேஸ்வரி குமாரசாமி, சிதம்பரப்பிள்ளை அப்புத்துரை ஆகியோரின் இளைய சகோதரியும், ஜெயக்குமார், இரத்தினகுமார், இரத்தினேஸ்வரி, ராஜினி ரஜனா, மாலினி, சாந்தினி, சிவகுமார் டிலீப்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், மனோகரி, வைஜந்தி, கலாஜினி, துஷாந்தினி, விக்கினேஸ்வரன், காலஞ்சென்ற நந்தகுமார் மற்றும் சிவானந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், வைஷ்ணவி, மாதினி, சதுர்த்திகா, ஹரிணி, ஹரிஸ்தர்மா, அருணகுமார், அஸ்வினி, அஸ்மிக்கா, கிரிஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான தர்மராஜா, தவபாக்கியம், ஜெயபாலன் ஆகியோரினதும் சிதம்பரநாதன், கணேசராஜா, தங்கராணி, புஸ்பராணி, வசந்தா ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2023) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொற்கைத்துறை இந்து மயானதிற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அற்கின்சன்றோட்,
வட்டுக்கோட்டை.
076 695 8425

தகவல்:
பிள்ளைகள்

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் திருமதி
### தம்பு இராசமணி

மண்ணில் 28.09.1926
விண்ணில் 14.01.2019

ஆயிரம் பிறைகண்டு அவனியில்
- புகழ் பரப்பி
சுற்றம் சூழ அனைவருக்கும்
- வாரி வழங்கி
எல்லோர் மனதிலும் இடம் பிடித்ததாயே
தங்கள் ஆத்மா சாந்தியடையப்
- பிரார்த்திக்கிறோம்.

குடும்பத்தினர்
மருதடிப்பிள்ளையார் கோவிலடி
கச்சாய் வீதி, கொடிகாமம்.

(CS 23191) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உக்ரைனுக்கு ஆயுத உதவிகள்

# அதிநவீனமான பீரங்கிகளை வழங்க அமெரிக்கா முடிவு!

ரஷ்யா கடும் கண்டனம்



**கீவ், ஜன. 30**

**உக்ரைனுக்கு அதி நவீன பீரங்கிகளை அனுப்புவதற்கு அமெரிக்கா முடிவெடுத்துள்ளது. அமெரிக்காவின் இந்த முடிவு, 'போரில் நேரடியாக ஈடுபடுவதற்கு நிகரான செயல்' என்று எச்சரித்துள்ளது ரஷ்யா.**

கிரீமியாவை ரஷ்யா ஆக்கிரமித்ததையடுத்து, அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அமைப்பில் சேர்ந்து பாதுகாப்புத் தேட உக்ரைன் முடிவெடுத்தது.

ஆனால் இதில் கொந்தளித்துப் போன ரஷ்யா, உக்ரைன் மீது கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி போர் தொடுத்தது. உலகமே எதிர்பார்க்காத நிலையில், இந்தப் போர் 11 மாதங்களைக் கடந்துவிட்டது. இன்னும் நீளுகிறது.

வல்லரசு நாடான ரஷ்யாவை போரில் சமாளிக்க உக்ரைனுக்கு அமெரிக்காவும், மேற்கத்திய நாடுகளும் பக்கபலமாக இருக்கின்றன. இதனால் எதிர்பார்த்தபடி உக்ரைனை ரஷ்யாவால் வாரிச்சுருட்டிக்கொள்ள முடியாமல் போனது.

தொடர்ந்து மேற்கத்திய நாடுகள் ஆயுத உதவியை வழங்க வேண்டும் என்று உக்ரைன் வலியுறுத்தி வந்தது. இந்த நிலையில் உக்ரைனுக்கு அதிநவீனமான 'லெப்பேர்டு2' ரக பீரங்கிகளை அனுப்பிவைக்க முடிவு எடுத்துள்ளதாக ஜேர்மனி அறிவித்துள்ளது. இதைத் தொடர்ந்து அமெரிக்காவும் 'ஆப்ராம்ஸ்' ரக நவீன பீரங்கிகளை உக்ரைனுக்கு அனுப்ப முடிவுசெய்துள்ளது. இதற்கு ரஷ்யா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி அமெரிக்காவுக்கான ரஷ்ய தூதர் அனடாலி ஆன்டனோவ் கருத்துக் கூறுகையில், 'ஆப்ராம்ஸ் பீரங்கிகளை உக்ரைனுக்கு அனுப்பி வைக்கும் அமெரிக்காவின் முடிவு, ரஷ்ய கூட்டமைப்புக்கு எதிரான மற்றொரு அப்பட்டமான ஆத்திரமூட்டும் நடவடிக்கையாக இருக்கும்' என்று தெரிவித்துள்ளார். (ம)



# கரடிக்கு வந்த 'செல்பி' மோகம்

*அமெ. விலங்கியல் பூங்காவில் சுவாரஸ்யம்!*

**வொஷிங்டன், ஜன. 30**

அமெரிக்காவின் விலங்கியல் பூங்காவொன்றில் உள்ள கண்காணிப்புக் கமராவில் கரடியொன்று சுமார் 400 செல்பிகளை எடுத்து ஆச்சரியப்படுத்தியுள்ளது. 46 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள குறித்த பூங்காவில் கண்காணிப்புக் கமராக்கள் பல பொருத்தப்பட்டுள்ளன.

இந்தக் கமராக்கள் பூங்காவில் விலங்குகளின் நடமாட்டத்தைக் கண்காணிப்பதற்காக பொருத்தப்பட்டுள்ளன. இந்தக் கமராக்களில் கரடியொன்று விதம்விதமாக தன்னைப் பதிவுசெய்துள்ளது.

அங்குள்ள கமராக்களைத் தேடிச்சென்று இவ்வாறு அந்தக் கரடி தன்னை ஒளிப்படமாகப் பதிவுசெய்து வருகின்றது என்று பூங்கா நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ம)

# அமெரிக்காவை உலுக்கும் தொடர் துப்பாக்கிச்சூடுகள்

கடந்த ஆண்டு மாத்திரம் 44,000 பேர் உயிரிழப்பு

வொஷிங்டன், ஜன. 30

அமெரிக்கால் கடந்த 2022ஆம் ஆண்டு மாத்திரம் 647 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இதில் 44 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அண்மையில் கலிபோர்னியாவின் லொஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் பல்லாயிரக்கணக்கான மக்களின் பங்கேற்புடன் இடம்பெற்ற சீனப் புத்தாண்டுக் கொண்டாட்டத்தின்போது இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் 10 பேர் உயிரிழந்தனர். அத்துடன் வடக்கு கலிபோர்னியாவில் அதற்கு அடுத்த சில தினங்களில் மீண்டும் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. இதில் 9 பேர் பலியாகினர். அமெரிக்காவின் அயோவாவில் உள்ள பாடசாலையொன்றில் அண்மையில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் இரண்டு மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். இவ்வாறாக அமெரிக்காவில் அதிகரித்துள்ள துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களில் கடந்த ஆண்டு மாத்திரம் 44 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் இது அங்கு தவறான முடிவெடுத்து உயிரிழப்போரின் எண்ணிக்கையைவிட இருமடங்கு அதிகம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# டயானாவின் ஆடை ஏலம்





நியூயோர்க், ஜன. 30

மறைந்த இங்கிலாந்து இளவரசி டயானாவின் ஆடையொன்று 6 லட்சம் அமெரிக்க டொலருக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய இங்கிலாந்து மன்னர் சார்ள்ஸின் முதல் மனைவியான டயானா மக்களால் அதிகம் ரசிக்கப்பட்டவர்.

ஒவ்வொரு முறையும் அவர் அணியும் ஆடைகளை ரசிப்பதற்கென்றே தனி ரசிகர் வட்டம் அவருக்கு உண்டு.

இந்நிலையில் 26 வருடங்களின் பின்னர் அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலுள்ள புகழ்பெற்ற நிறுவனம் ஒன்றால் இங்கிலாந்து இளவரசி டயானா அணிந்த ஆடை ஏலம் விடப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் ஆடைவடிவமைப்பாளர் ஒருவரால் வடிவமைக்கப்பட்ட இந்த ஆடையை டயானா இரண்டு முறை மாத்திரமே அணிந்துள்ளார். இந்த ஆடை 80 ஆயிரம் முதல் 1.2 லட்சம் டொலர் வரை விற்பனையாகும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அதனைவிட 5 மடங்கு அதிக விலைக்கு விற்பனையாகியுள்ளது எனக் கூறப்படுகிறது. இதன்மூலம் ஏலத்தில் அதிக விலைக்கு விற்பனையான ஆடை என்ற பெருமையை டயானாவின் இந்த ஆடை பெற்றுள்ளது. (ச-இ)

# பேஸ்புக், இன்ஸ்டாவில் மீண்டும் வந்தார் ட்ரம்ப்

வொஷிங்டன், ஜன. 30

பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராமில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கான தடை நீக்கப்படுவதாக மெட்டா நிறுவனம் அறிவித்துள்ளது.

வன்முறையைத் தூண்டும் விதமாக சமூக ஊடகங்களில் பதிவிட்டதாகக் கடந்த 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ட்ரம்பின் பேஸ்புக், இன்ஸ்டாகிராம் மற்றும் டுவிற்றர் பக்கங்கள் முடக்கப்பட்டன.

கடந்த ஆண்டு டுவிற்றர் நிறுவனத்தை எலான் மஸ்க் வாங்கியவுடன் ட்ரம்புக்கான தடையை டுவிற்றர் நிறுவனம் நீக்கியது. இந்தநிலையில் இரண்டு ஆண்டுகளுக்குப் பின் பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராமில் ட்ரம்புக்கு விதிக்கப்பட்ட தடையை மெட்டா நிறுவனம் நீக்கியுள்ளது. (ச-இ)

# உலகப் பொருளாதாரம் சரிவு: ஆட்குறைப்பில் நிறுவனங்கள்

வொஷிங்டன், ஜன. 30

உலகின் மிகப்பெரும் முன்னணி நிறுவனங்கள் தமது ஊழியர்களை ஆட்குறைப்புச் செய்யும் நடவடிக்கையில் தற்போது தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

கொரோனா வைரஸ், உக்ரைன்-ரஷ்யா போர், கச்சா எண்ணெய் விநியோகம், அரசியல் உறுதியின்மை, உற்பத்தி நுகர்வு இடையேயான வேறுபாடு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் கடந்த சில ஆண்டுகளாக உலகப் பொருளாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதேநிலை நீடித்தால் இந்த ஆண்டில் உலகப்பொருளாதாரம் மேலும் மந்தநிலையைச் சந்திக்கும் என்று சர்வதேச நாணய நிதியத் தலைவர் கிறிஸ்டலினா எச்சரித்துள்ளார்.


இந்தநிலையில் உலகின் பல்வேறு மிகப்பெரிய நிறுவனங்கள் தமது ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைத்து பணிநீக்க அறிவிப்பை வெளியிட்டு வருகின்றன.

அந்தவகையில் பாடல் இசைத்தளமான 'ஸ்பொடி பை' நிறுவனம் உலகம் முழுவதும் தனது ஊழியர்களில் 6 சதவீதமானோரை பணிநீக்கத் திட்டமிட்டுள்ளது. அதேபோல், அமெரிக்காவின் பிரபல முதலீட்டு வங்கியான 'கோல்ட்மென் சச்ஸ்' சுமார் 3 ஆயிரம் ஊழியர்களை பணிநீக்கம் செய்துள்ளதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அமேசன் நிறுவனமும் தங்கள் ஊழியர்களில் கணிசமானோரை பணிநீக்கம் செய்யும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது. கூகுளின் தாய் நிறுவனமான 'ஆல்பாபெட்' 12 ஆயிரம் ஊழியர்களை பணிநீக்கம் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - இந்திய ஒப்பந்தம் முழுமையாக நடைமுறையாகவேண்டும்



இலங்கையும் இந்தியாவும் நிலம் மற்றும் கடல் எல்லையைப் பகிர்ந்து கொண்டுள்ள தெற்காசிய அண்டை நாடுகளாக உள்ளதோடு 2 ஆயிரத்து 500 ஆண்டுகள் வரலாற்று முக்கியமான பொருளாதார, இராஜதந்திர மற்றும் கலாசார உறவுகள் மூலம் பிணைக்கப்பட்டுள்ளன.

இலங்கை, இந்தியா ஆகிய இருநாடுகளும் சுதந்திரமடைந்து 75ஆண்டுகளை கடந்துள்ள நிலையில் இருதரப்பு உறவுகள் பல்வேறு வழிகளிலும் மேலும் பிணைக்கப்பட்டுள்ளமையானது வரலாற்று பதிவாகும்.

இருநாடுகளுக்கு இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் உள்ளிட்ட முக்கிய ஒப்பந்தங்கள் மூலம் இருதரப்பு உறவுகள் மேம்பட்டுள்ளதோடு இது பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதற்கு அதிக உத்வேகத்தை வழங்கியுள்ளது.

பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய கூட்டமைப்பு மற்றும் பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்முயற்சி போன்ற சர்வதேச தளங்களில் இரு நாடுகளினதும் கூட்டு பங்கேற்பு இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது.

ஏற்கனவே இருநாடுகளுக்கும் காணப்படும் இணைப்புகள் இருநாடுகளுக்கும் இடையிலான பிரதேசங்களை சேவைகள் மற்றும் முதலீடுகள் உள்ளிட்ட வணிக ரீதியான ஆழமான ஒத்துழைப்புக்கு இடமளிக்கிறது.

இரு நாடுகளுக்கு இடையிலான புதிய இணைப்பு மூலோபாயத்தின் மூலம் பயன்படுத்தப்படாத திறன்களைப் பயன்படுத்துவதற்கு இருநாடுகளுக்கும் வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளதோடு, தொடர்ச்சியான உலகளாவிய மற்றும் பிராந்திய முன்னேற்றங்கள் மூலம் விரைவாக ஒத்துழைப்புக்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அதேநேரம், தெற்காசியாவில் பிராந்திய இணைப்புக்கான இந்தியாவின் முயற்சியில் அதன் 'அண்டை நாட்டுக்கு முதலிடம்' என்ற கொள்கையின் கீழ் பரஸ்பர உறவுகள் மேம்பட்டு வருவதோடு உலகளாவிய வல்லரசுகளின் கவனமும் பிராந்தியத்தை நோக்கி குவிந்துள்ளது.

இதேநேரம், கொரோனா தாக்கத்தின் பின்னரான நிலைமையில் இரு நாடுகளின் பொருளாதார மற்றும் இராஜதந்திர உறவுகளை மறுவடிவத்தைப் பெற்றுள்ளதோடு மற்றும் அண்டை நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்தவும் மீண்டும் மதிப்பு மிக்கதாகவும் மதிப்புமிக்க வாய்ப்பை வழங்குகிறது.

இலங்கையில் வளர்ந்து வரும் நடுத்தர வர்க்கம் மற்றும் இதர சுய முயற்சிகளுக்கு இந்தியா பரந்த அளவிலான முக்கிய சந்தையாக அமைவதுடன், இலங்கையின் தேயிலை, கோப்பி, ஆடைகள் மற்றும் சுற்றுலா ஆகியவற்றுக்கான அதிக வாய்ப்புகளை வழங்குகிறது.

அதுமட்டுமன்றி நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு இதுவரையில நான்கு பில்லியன் டொலர்கள் வரையிலான உதவிகளை உடனடியாக இந்தியா வழங்கி தோள்கொடுத்திருக்கின்றது. உலகில் எந்த வொரு நாடும் தற்போதைய சூழலில் இலங்கைக்கு உதவிகளை அளிப்பதற்கு முன்வராத நிலையில் இந்தியா தனது ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளது.

அதுமட்டுமன்றி நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்காக இந்தியா, சர்வதேசத்தினை நாடியுள்ள இலங்கைக்கு பேச்சுக்களில் பங்கேற்று உத்தரவாதங்களை வழங்குவதற்கும் செயற்பட்டுவருகின்றது.

அதுமட்டுமன்றி, இலங்கையில் வடக்கு,கிழக்கு, மலையகத்தில் பொதுமக்களின் உட்கட்டமைப்பு மேம்பாடுகளை வலுப்படுத்துவதற்கும் இந்தியா மிகப் பெரிய பங்களிப்பைச் செய்துவருகின்றது.

இருப்பினும், தற்போது வரையில், இந்தியாவுடன், இலங்கை மேற்கொண்டுள்ள இந்திய இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தாமை இருநாடுகளுக்கும் இடையிலான மிகப்பெரும் கரிசனைகளை ஏற்படுத்தும் விடயமாக இருக்கின்றது.

ஆகவே வரலாற்று உறவுகள் மற்றும் 75ஆண்டுகளான சுதந்திரத்தின் பின்னரான பிணைப்புக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை முன்வரவேண்டியது அவசியமாகின்றது.

நன்றி - இணையம்

# 4 கொள்ளையர்கள் நேற்றுப் பிடிபட்டனர்

யாழ்ப்பாணம், ஜன. 30

வாள்களுடன் புகுந்து வீட்டிலுள்ளவர்களை அச்சுறுத்தி நகைகளைக் கொள்ளையடித்த சந்தேகத்தில் நால்வர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிமிருந்து கொள்ளையிடப்பட்ட நகைகள், வாள்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் கோப்பாய், மூன்று கோயிலுக்கு அண்மையாக கடந்த 3 ஆம் திகதி அதிகாலை 1.30 மணிக்கு கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. 5 பேர் கொண்ட கும்பல் வாள்களுடன் வீட்டுக்குள் புகுந்து மூன்று பெண்களை அடித்துத் துன்புறுத்தி, வயோதிபர்களை அச்சுறுத்தி 12 தங்கப் பவுண் நகைகளை கொள்ளையிட்டுத் தப்பித்தது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழான பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சுன்னாகம், இணுவில் பகுதிகளைச் சேர்ந்த 25, 26 வயதுகளையுடைய நால்வர் நேற்று கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்களிடம் கொள்ளையிட்ட நகைகளில் ஒரு பகுதி, அடகு வைக்கப்பட்ட நிலையில் பற்றுச்சீட்டுகள் மற்றும் வாள்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

இதேவேளை, கடந்த ஜனவரி 15 ஆம் திகதி தைப்பொங்கல் தினத்தன்று வீதியில் சென்ற ஆசிரியையைத் தாக்கி விட்டு நகையை கொள்ளையிட்ட சம்பவத்துடனும் இந்தச் சந்தேகநபர்களுக்கு தொடர்புள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(அ-ஓ-26,27)


## மரண அறிவித்தல்

தோற்றம்
24 - 05 - 1951



மறைவு
29 - 01 - 2023

### திருமதி சறோஜினிதேவி புஷ்பநாதன்

(பங்குதாரர், துர்க்கா பொத்தகச்சோலை- சுன்னாகம்)

தேவி வாசா, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினிதேவி புஷ்பநாதன் அவர்கள் நேற்று (29.01.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா அன்னபூரணம் தம்பதியினரின் ஏகபுத்திரியும், சுன்னாகம் காலஞ்சென்ற சபாபதி-பூமணி தம்பதியினரின் பிரியமான மருமகளும், சபா.புஷ்பநாதன் (துர்க்கா பொத்தகச்சோலை-சுன்னாகம்) அவர்களின் பாசமிகு துணைவியும், ஜனனி (மனிதவள முகாமையாளர்-திண்ணை), வைத்தியகலாநிதி ஷாலினி (தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை) ஆகியோரின் அன்பான அன்னையும், காலஞ்சென்ற யோகராசா, ஜெயராசா, விஜயராசா, சௌந்தரராசா (போதனா வைத்தியசாலை -யாழ்ப்பாணம்), மகேந்திரராசா மற்றும் கிருபாகரன் (W.M பாதுகாப்புச் சேவை) ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2023) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் பிற்பகல் 3.00 மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பஸ் நிலையம் முன்பாக,
சுன்னாகம்.

தகவல்
குடும்பத்தினர்.
078 749 0219


# புல்மோட்டையில் குழுமோதல் இருவர் பரிதாபகரமாகச் சாவு!!!

திருகோணமலை, ஜன. 30

புல்மோட்டையில் இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட கைகலப்பில் இருவர் உயிரிழந்துள்ளனர். அத்துடன், காயமடைந்த 4 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். நேற்று பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகப் பொலிஸார் அறிக்கையிட்டுள்ளனர்.

புல்மோட்டையில் விவசாயக் காணி எல்லைப் பிரச்சினை காரணமாக இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட வாக்குவாதம், பின்னர் கைகலப்பாக மாறியுள்ளது. சம்பவத்தில் புல்மோட்டைப் பகுதியைச் சேர்ந்த 42 வயதான இருவர் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவத்தில் பலத்த காயமடைந்த 4 பேர் புல்மோட்டை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(அ-ஓ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளின் விடுதலையை திசை திருப்புகிறார் நீதி அமைச்சர்

## சாடுகிறார் கே.வி.தவராசா

யாழ்ப்பாணம், ஜன. 30
தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விடயத்தை திசை திருப்புவதற்காக, தமிழ் சட்டத்தரணிகளே அவர்களின் விடுவிப்புக்கு குந்தமாக இருப்பதாக கூறும் நீதியமைச்சர் விஜயதாஸ, முடிந்தால் அவ்வாறு தடையாக இருப்போரின் பெயர் விவரங்களைப் பகிரங்கப்படுத்தட்டும் - இவ்வாறு ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா சவால் விடுத்துள்ளார்.
இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,
நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச யாருடைய பெயரையும் குறிப்பிடாமல் பொதுவாக தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளில் சம்பந்தப்படுகின்ற சில தமிழ் அரசியல்வாதிகள், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்குத் தடையாக இருப்பதாகத் தெரிவித்துள்ளமையானது நழுவல் போக்கான பொறுப்பற்ற பதிலாகும். அரசாங்கத்தின் விருப்பமின்மையும், அதிகாரத்தின் வாயிலான அடக்குமுறையையும், பயங்கரவாதச் சட்டம் பல தசாப்தங்களாக முறைகேடாக பயன்படுத்துகின்ற தன்மையையும் மறைத்து , உண்மைகளை வெளிப்படுத்தாமல் பிரச்சினையின் போக்கை வேறு திசைக்கு திருப்பி , பிரச்சினைக்கு பதில் கூற கடப்பாடுடையவர்களாக தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளைக் கையாளுகின்றவர்களின் பக்கமே திசை திருப்பிவிட்டு தமிழ் மக்களுக்குள்ளேயே சங்கடத்தையும் சந்தேகத்தையும் விதைத்து, குழப்பத்தை தோற்றுவித்து தப்பித்துக்கொள்கின்ற முயற்சியாகும்.
ஓரிரு அரசியல்வாதிகளான சட்டத்தரணிகளே அரசியல் கைதிகளின் வழக்குகளைக் கையாள்கின்றனர். நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவுக்கு வழக்குகளை கையாளுகின்ற சில தமிழ் அரசியல்வாதிகளான சட்டத்தரணிகளே தடையாக இருப்பதாகத் தெளிவாக தெரிந்திருக்குமாயின் அத்தகையோரின் பெயர் விவரங்களும் தெரிந்திருக்கவேண்டும். தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு உண்மையிலேயே தீர்வு காண வேண்டும் என்ற இதயசுத்தியுடன் நிலைப்பாட்டில் இருப்பாரானால் உடனடியாக அவர் ஒரு பொறுப்புள்ள அமைச்சராக தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்குத் தடையாக இருக்கின்ற குறித்த நபர்களின் பெயர்களை அடையாளப்படுத்தவேண்டும் - என்றுள்ளது. (அ-ஒ-5)

### 'எழுவோம்...

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைக்காக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்தப் பேரணி ஒழுங்கமைக்கப்படவுள்ளது. பேரணிக்கான ஆதரவு கோரி சிவில் சமூகத்தினர், மாணவர்கள், மதத் தலைவர்கள், பல தரப்பட்டவர்களையும் மாணவர் ஒன்றியத்தினர் மாவட்டம் தோறும் சந்தித்து வருகின்றனர். பேரணிக்கான ஆதரவை பல தரப்பினரும் வெளிப்படுத்தியுள்ளனர். பெரும் எடுப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்றிலிலிருந்து பேரணி - இலங்கையின் சுதந்திர நாளான - பெப்ரவரி 4ஆம் திகதி - கரிநாள் அன்று - ஆரம்பமாகவுள்ளது.
கிளிநொச்சி வரையில் முதல் நாள் பேரணி நடைபெறும். மறுநாள் 5 ஆம் திகதி கிளிநொச்சியிலிருந்து பேரணி ஆரம்பமாகி மாங்குளம் சந்தியைச் சென்றடையும். அதேநேரம் மன்னார் மற்றும் வவுனியாவிலிருந்து புறப்படும் பேரணிகளும் மாங்குளம் சந்தியை வந்தடையவுள்ளன. சகல பேரணிகளும் ஒன்றிணைந்து அங்கிருந்து புறப்பட்டு முல்லைத்தீவில் இரண்டாம் நாளை நிறைவு செய்யும்.
மூன்றாம் நாள் பெப்ரவரி 6 ஆம் திகதி - முல்லைத்தீவிலிருந்து புறப்படும் பேரணி, தமிழர் தாயகத்தின் சிங்கள ஆக்கிரமிப்பு பிரதேசமான தென்னமரவாடி ஊடாகச் சென்று திருகோணமலையைச் சென்றடையும்.
நான்காவது இறுதி நாளுமான பெப்ரவரி 7ஆம் திகதி திருகோணமலையிலிருந்து புறப்படும் பேரணி மட்டக்களப்பு காந்தி பூங்காவைச் சென்றடைந்து அங்கு நிறைவடையும். இதன்போது அம்பாறை மாவட்டத்திலிருந்து புறப்படும் பேரணியும் அங்கு வந்தடையும். (அ-ஒ-125)

### இலங்கையின்...

மன்னாரில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
இல்லாத சுதந்திர நாளை இலங்கை கொண்டாடவுள்ளது.
நாங்கள் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் முன்னெடுக்கப்படும் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கி இலங்கையின் சுதந்திர நாளை கரிநாளாகக் கடைப் பிடிப்போம்.
க்டந்த 14 ஆண்டுகளாகப் போராடுகின்றோம். எங்களின் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு தேவை.
மேலும், பெப்ரவரி 5 ஆம் திகதி மன்னாரில் கரிநாள் போராட்டம் நடைபெறும் - என்றார். (அ-ஒ-213)

### தமிழரசின்...

சாவகச்சேரியில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியுடன் ரெலோ, புளொட் என்பன ஒன்றாகப் பயணித்திருந்தன. உள்ளூராட்சித் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தனித்துப் போட்டியிடும் முடிவை எடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்றது. இவ்வாறானதொரு நிலையிலேயே சுமந்திரன் மேற்படி குற்றச்சாட்டுக்களை தமது முன்னாள் பங்காளிகளை நோக்கி அடுக்கியுள்ளார்.
'எந்தச் சந்தியிலும் நின்று எவரையும் காட்டிக் கொடுக்கவில்லை. எங்கேயும் முகத்தை மூடியாகச் சென்று தலையாட்டவில்லை. தூள் கடத்தவில்லை. இவ்வாறானவர்களும் இணைந்திருந்தனர். அதன்போதும் நான் இதனைப் பகிரங்கமாகக் கூறியுள்ளேன். அதனை இப்போதும் கூறுகின்றேன். தலையாட்டிய பழக்கதோசம் இன்றும் அவர்களை விட்டுப் போகவில்லை. இதேநேரம் அதில் ஒருவர், 1980 ஆம் ஆண்டு இதனைச் சாதித்தோம், 1985 இல் இதனைச் சாதித்தோம், 1987இல், 1989 இல், 1994 இல், 2001 இல், 2004 இல் இதனைச் சாதித்தோம் என வரலாற்றைப் பட்டியலிடுகின்றார். அதே பட்டியலில் எத்தனையாம் ஆண்டுகளில் யாரைப் போட்டுத் தள்ளினோம்? எத்தனையாம் ஆண்டு அரச கூலிப்படையாக சேர்ந்தியங்கினோம் என்பதைக் கூற அவர் மறந்துவிட்டார்' என்று தெரிவித்தார் சுமந்திரன்.
எந்தத் தரப்பை நோக்கி இந்தக் குற்றச்சாட்டுகளை முன்வைக்கிறார் என்பதை அவர் வெளிப்படையாகக் கூறவில்லை.
இதேவேளை, உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி முன்னர் கூட்டமைப்பிலிருந்த பங்காளிகளான ரெலோ, புளொட்டுடன் இணைந்து ஆட்சியமைக்கும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அடிக்கடி இப்போது தெரிவித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-26)

### குளிக்கச்...

வாக முன்னெடுக்கப்பட்டன. இருப்பினும் சிறுவன் கண்டுபிடிக்கப்படவில்லை.
நாகர்கோயில் வடக்கைச் சேர்ந்த நந்தகுமாரன் திருமுருகன் என்ற சிறுவனே இவ்வாறு காணாமற்போயுள்ளான்.
மாமுனைக் கடலில் குளிப்பதற்கு 3 சிறுவர்கள் நேற்று மதியம் சென்றுள்ளனர். குளித்து முடித்து ஒரு சிறுவன் கரையேறியுள்ளான். எஞ்சிய இருவரும் குளித்துக் கொண்டிருந்தபோது திடீரென அலை இழுத்துச் சென்றுள்ளது. கரையேறிய சிறுவன் இழுத்துச் செல்லப்பட்ட சிறுவர்களில் ஒருவரை மயிரிழையில் காப்பாற்றியுள்ளான். மற்றைய சிறுவனைக் காப்பாற்ற முடியவில்லை. அவன் அலையில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளான்.
காப்பாற்றப்பட்ட 16 வயதுச் சிறுவன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான். (அ-ஒ-26)

### சபைகள்...

பெரும்பாலும் உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெறும்போது சபைகள் கலைக்கப்படுவது வழமை.
இம்முறை தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட நிலையில் மன்றங்கள் கலைக்கப்படாத நிலையில் அவற்றின் தவிசாளர்களாக இருப்பவர்கள் தமது தேர்தல் பரப்புரைகளுக்காக அரச வாகனங்களைப் பயன்படுத்துகிறார்கள்.
அது மட்டுமல்லாது தவிசாளருக்கு ஆதரவான கட்சி உறுப்பினர்களும் அரச வாகனங்களைத் தமது தேர்தல் நடவடிக்கைக்குப் பயன்படுத்துகின்றனர். அவர்களது இத்தகைய செயற்பாடானது தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட நிலையில் தேர்தல் விதிகளை மீறும் செயற்பாடாகவே பார்க்கவேண்டிய உள்ளது - என்றார். (அ-ஒ-20)

### மோ.சைக்கிள்...

சண்முகலிங்கம் பிரதாப் (வயது - 27) என்பவரே உயிரிழந்துள்ளார்.
சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.
உயிரிழந்தவரின் சகோதரரும் சில காலங்களுக்கு முன்னர் விபத்தில் உயிரிழந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.
இதேவேளை, விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் சாவகச்சேரி மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த நிலையில், அவரது நண்பர்களும், உறவினர்களும், அரசியல் கட்சி ஒன்றின் ஆதரவாளர்களும் மருத்துவமனைக்குள் புகுந்து சடலத்தை உடனே விடுவிக்கவேண்டும் என்று அழுத்தம் கொடுத்து குழப்பம் விளைவித்துள்ளனர்.
(ஒ-9-26-159-131)

### தமிழ்க்...

ளார் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.
உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாகப் போட்டியிடும் கட்சிகள், கூட்டமைப்பிலிருந்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தனி வழி செல்வதற்கு சுமந்திரனே காரணம் என்று பகிரங்கமாகக் குற்றம் சுமத்தியிருந்தனர். இவ்வாறானதொரு பின்னணியிலேயே சாவகச்சேரியில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் சுமந்திரன் மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.
'கூட்டமைப்புக்கு எதிராகச் செயற்பட அன்று அரசுடன் ஒட்டி நின்று ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்தவர்களின் கட்சி இன்று கூட்டமைப்பைப் பாதுகாப்பதாகக் கூறுகின்றது. அதனையும் நம்பி, சிலர் கூறித் திரிகின்றனர். இலங்கையை ஜனநாயக சோசலிசக் குடியரசு என்பார்கள். ஆனால் நாட்டில் ஜனநாயகமும் இல்லை சோசலிசமும் இல்லை. இதனைத் தமிழர்கள் மாத்திரமல்ல சிங்களவர்களும் கூறுகின்றார்கள். இல்லாத விடயத்தைத்தான் நாடு தனது பெயரில் வைத்துள்ளது. இதேபோன்று எமக்கு எதிராகப் புறப்பட்டுள்ளவர்களும் தமக்கான பெயரில் ஜனநாயகம், தேசியம் என்றெல்லாம் தமது கட்சிப் பெயரில் வைத்துள்ளார்கள். அவை அவர்களது கட்சியில் இல்லாத நிலையிலேயே அதனைக் கட்சிப் பெயரில் வைத்துள்ளனர்' - என்றார் சுமந்திரன். (அ-ஒ-26)

### கரிநாள்...

மன்றி இலங்கை வாழ் மக்கள் அனைவருக்குமே இன்று இருள் நாளாகவே உள்ளது. பெப்பரவரி 4 ஆம் திகதியை இருள் நாளாகக் கடைப்பிடிப்பதோடு மட்டக்களப்பு மாவட்டத்தில் எம்மால் ஒரு கறுப்பு போராட்டமும் முன்னெடுக்கப்படவுள்ளது. இதேநேரம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுக்கும் போராட்டத்துக்கும் எமது முழுமையான ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கப்படும்' - என்றார். (அ-ஒ-26)

### 82ஆயிரம்...

குழுக்களைச் சேர்ந்த சுமார் 82 ஆயிரம் வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராளிகளைக் கொச்சைப்படுத்துவதை பெருமையாகப்பேசி வாக்குக்கேட்கிறார்கள்

## மாவையையும் ஓரங்கட்டும் அந்தத் தரப்பை தோற்கடிக்கவேண்டும் என்கிறார் கஜதீபன்

யாழ்ப்பாணம், ஜன. 30

30 ஆண்டுகளாக ஆயுதம் தூக்கிப் போராடிய, போராளிகளை கதாநாயகர்களாக கொண்டாடிய இனத்தில், 2010ஆம் ஆண்டின் பின் கொழும்பிலிருந்து அரசியலுக்கு வந்தவர்கள், ஆயுதம் தூக்காததை பெருமையாக பேசி வாக்குக் கேட்கிறார்கள். இது மோசமான அரசியல் கலாசாரம். மாவீரர்களுக்கும், போராளிகளுக்கும் செய்யும் துரோகம். இவ்வாறு வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி தேர்தலில் குத்து விளக்கு சின்னத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாக தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வலி. வடக்கு பிரதேசசபைக்கு போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, மல்லாகம் கிராம அபிவிருத்தி சபை மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் உரையாற்றிய போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த தேர்தல்களில் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு சறுக்கல் ஏற்பட்டது. ஆனால் மாவை சேனாதிராசா போன்ற தலைவர்களால் வலி. வடக்கு உள்ளிட்ட பகுதிகள், கிளிநொச்சி பகுதிகளிலேயே ஓரளவு வாக்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு கிடைத்தது. அப்படியான மாவை.சேனாதிராசா போன்ற தலைவர்கள் இன்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நடவடிக்கைகளால் அதிருப்தியடைந்து ஒதுங்கியிருக்கிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைந்தமைக்கு, ரணிலின் பின்னணியில் இயங்கும் இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் ஒரு குழுதான் முழுக்காரணம். அவர்கள் 2010ஆம் ஆண்டு முதல் தமிழ் மக்களின் போராட்டத்தை சிதைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

அரசியல் தீர்வுக்கான நெருக்கடி அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது. இந்த முக்கியமான கட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைப்பதென இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஒரு தரப்பு முடிவெடுத்து, வெற்றியடைந்துள்ளது.

இப்போது, சுதந்திரதினத்துக்கு எதிராக கறுப்புக் கொடி போராட்டம் நடத்தப் போவதாக தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். இது போலி நாடகம். கடந்த முறை ரணில் அரசாங்கத்துடன் கூடிக்குலாவிக் கொண்டிருந்து, குடும்பத்துடன் சென்று சுதந்திரதின நிகழ்வுகளில் கலந்து கொண்டு, சிங்கக்கொடியை ஏந்திய தமிழ் அரசுக்கட்சித் தலைவர்கள், இப்பொழுது திடீரென ஞானம் வந்து, கறுப்புக்கொடி போராட்டத்தை அறிவித்துள்ளனர். தேர்தல் வருவதே இந்த ஞானத்திற்கு காரணம்.

தமிழ் மக்கள் மத்தியில் கே.வி.தவராசா போன்ற நல்ல சட்டத்தரணிகள் இருக்கிறார்கள். அவர்கள் காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடயங்களிற்காக தொடர்ந்து பாடுபடுகிறார்கள். இன்னும் சில சட்டத்தரணிகள் பணத்துக்காக செயற்படுகிறார்கள். அவர்கள் தமிழ் அரசுக் கட்சிக்குள்ளும் இருக்கிறார்கள். நல்லாட்சிக் காலத்தில் ரணில் அரசுடன் நெருக்கமாக இருந்து, கொழும்பு துறைமுக நகர ஒப்பந்த தயாரிப்பில் ஈடுபட்டு, பெருந்தொகைப் பணத்தைப் பெற்ற நமது சட்டத்தரணிகள் பற்றிய விவரங்களையும் நாங்கள் பகிரங்கப் படுத்துவோம். தமிழ் அரசுக் கட்சியின் பிரமுகரான சட்டத்தரணியொருவர், ரணில் அரசுடன் வெளிப்படையாகவும், கோத்தா அரசில் மறைமுகமாகவும் டீல் பேசி நிறைய பணம் பெற்றிருந்தார். அவரை நெருக்கமாக கவனித்தீர்கள் என்றால், எப்பொழுதும் வலது கையை மேசைக்கு கீழே வைத்திருந்து பெருவிரல், சுட்டு விரல், நடுவிரலை உரசியபடியே இருப்பார். அது பணம் வாங்கிப் பழகிய பழக்க தோசம், என்றார்.

(ஒ--இ)


### காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை வைத்தியசாலை வீதியிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு முன்பாக இரண்டரைப் பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு:

**076 279 0146**

### காணி விற்பனைக்கு

பத்து பரப்பு காணி இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உள்ளது. லேலண்ட் கொம்பனி நாவற்குழி அருகாமையில் உள்ள வீதியில் A9 றோட்டில் இருந்து 300 மீட்டர் தூரத்தில் நல்ல தண்ணீர், நல்ல சூழல், நல்ல நிலப்பரப்பு.

**077 638 5683, 076 755 8606**


## மரண அறிவித்தல்

மலர்வு 01 - 06 - 1965



உதிர்வு 29 - 01 - 2023

### திருமதி இந்திரகுமாரன் கமலா

சுழிபுரம் கிழக்கு, சுழிபுரத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திரகுமாரன் கமலா நேற்று (29.01.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ் சென்ற செல்லையா பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு புதல்வியும், தம்பியையா இந்திரகுமாரனின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற முருகையா, வடிவேல், கணேஸ்வரன், ரதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அபிராமி (SoftwareEngineer), கார்த்திகா(Civil Engineer) ஆகியோரின் அன்புத்தாயாரும், இராசதுரை சுதாகரனின் பாசமிகு மாமியாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2023) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் . இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சத்தியகாடு
சந்தை வீதி,
சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.

தகவல் :
குடும்பத்தினர்.
076 3073 385

## மரண அறிவித்தல்

அன்னையின் மடியில் 06 - 10 - 1940



ஆண்டவன் அடியில் 29 - 01 - 2023

### நாகமணி றோச் தனரத்தினம்

(இளைப்பாறிய சாலை முகாமையாளர் – காரைநகர்)

ஏழாலை கிழக்கு ஏழாலையைப் பிறப்பிடமாகவும், நாலாம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி றோச் தனரத்தினம் அவர்கள் நேற்று (29.01.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை நாகமணி (கிளாக்கர் நாகமணி) றோசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான உடுவிலைச் சேர்ந்த பெஞ்ஜமின் கனகரத்தினம், கிறேஸ் புஷ்பரட்ணம் தம்பதிகளின் அன்பு மருமகனும், நித்தியானந்த ராணியின் அன்புக் கணவரும், திருமதி தயாளினி சுரேந்திரன் (ஆசிரியை - சென்ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்), தனறஞ்சன் (கணினி இயக்குநர் - இ.போ.ச - கோண்டாவில்), காலஞ் சென்ற எட்வின் தனறோசான் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்ற லில்லி புஸ்பம் ஜேம்ஸ், வில்லியம் ஜெயரத்தினம் (கனடா), விஜயரத்தினம், அரியரத்தினம், ஞானரத்தினம், திருமதி ஜசிந்தா ஞானசோதி (UK), காலஞ்சென்ற செல்வரத்தினம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற டொன் பொஸ்கோ பசில் சுரேந்திரன், பிறேமமாலினி ஆகியோரின் மாமனாரும், அன்றியா வர்ஷனா (யா/ வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை), டெமியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத்திருப்பலி இன்று (30.01.2023) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் நிறைவேற்றப்பட்டு நல்லடக்கம் ஏழாலை புனித இசிதோர் சேமக்காலையில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல் 15A, 4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

077 160 6900,
077 227 4506

தகவல்:
தனரத்தினம்
தனறஞ்சன்



[illegible]ந்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org